உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.


# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| ஆண்டு எ | பலவான்குடி—பவ—வைகாசி | திங்கள் ௰. |
| --- | --- | --- |


உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

# பாலை நெய்தல் பாடியது.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணமானது, ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய 'திருத்தொண்டத் தொகை'யையும், ஸ்ரீநம்பியாண்டார் நம்பி அருளிய 'திருத்தொண்டர் திருவந்தாதி'யையும் ஆதாரமாகக் கொண்டு, தற்சுதந்தரத்தானும் தற்புகழ்ச்சியானும் தன்மேம்பாடு வெளிப்படுத்த நிமித்தத்தானு மன்றிச் சிவசுதந்தரத்தானும் நிராங்காரத்தானும் திருவருள் வயத்தானும் நின்று அருண்மொழித் தேவராகிய தெய்வப்புலமைச் சேக்கிழார் சுவாமிகள், தில்லைமூதூரில் ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும் ஆனந்த நடேசமூர்த்தி 'உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்' என்னும் மெய்ம்மொழித் தொடராகிய முதலடி யெடுத்தருளப் பெற்று விரித்துரைக்க விழுமிய நூலாகும். இப் 'புராணப்பெருமை அளப்பில. அதனை யீண்டு விரிக்கிலம்.

இத் தகு புராணத்துள், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்துக்குத் தேவாரங்களும், நம்பியாண்டார் நம்பியருளிய ஆளுடைய பிள்ளையார்: திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை முதலிய நூல்களும் ஆதாரமாய் அமைந்துள்ளனவேயாம்.

திருஞான சம்பந்தப்பெருமான் இயற்றியருளிய அநேக அற்புதச் செயல்களுள், பாலை நிலத்தை நெய்தனிலமாக மாற்றியதும் ஒன்றென்பர். இவ்வற்புதம் நிகழ்ந்த இடம் சுவாமிகளின் திருத்தாயார் திருவவதாரத் தலமாகிய திருநனிபள்ளி எனவும், அவ்வற்

புதச்செயலைக் குறித்த அருளிப்பாடல், "காரைகள் கூகை முல்லை களவாகை யீகை" என்னும் முதலையுடைய திருப்பதிகம் எனவும் கூறுவர்.

சீகாழிப் பதியில் திருஞானசம்பந்தர் தமது மூன்றுவதுகவயதில் உமையம்மையின் திருமுலைப்பாலுண்டு வேதசாரமாகிய தேவாரம் ஓதிய அற்புதச் செயல் நாடெங்கும் பரவவே, திருநனிபள்ளியிலுள்ள அந்தணர்கள் சீகாழியை யடைந்து, தங்களூருக்கு எழுந்தருள வேண்டுமெனச் சுவாமிகளிடம் வேண்டிக் கொண்டதும், சுவாமிகள் அதற்கிசைந்து புறப்பட்டதும், அவரது செங்கமலப் போதனைய திருவடிகள் பூமியிற் படியப் பொருத சிந்தையராகிய தந்தையார் தமது தோளிற் சுவாமிகளைத் தூக்கிக்கொண்டு நடந்ததும், அதுபோது எதிரே தோன்றுவது எப்பதியெனத் தந்தையாரைச் சுவாமிகள் வினவ, தந்தையார் திருநனிபள்ளியென விடைபகர்ந்ததும், அதனைக்கேட்ட முத்தமிழ் விரகர் 'காரைகள் கூகை முல்லை...' என்ற முதலையுடைய திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்கோயிலையணைந்து சிவபெருமானைப் பணிந்து போற்றித் திருவருள்பெற்று அவ்வூரில் அமர்ந்திருந்ததும் ஆகிய பகுதியைச் சேக்கிழார் சுவாமிகள் ஐந்து திருப்பாசுரங்களால் விளக்கியுள்ளார்கள். அவற்றுள்ள,

"செழுந்தாளப் பொன்னிசூழ் திருநனி பள்ளி......"
"வானணையு மலர்ச்சோலை தோன்றுவ தெப்பதி.......'"
"பானல்வயற் திருநன்னி பள்ளி"

என்னும் விசேடணங்களால் திருநனிபள்ளி நீர்வளம் நிலவளம் செறிந்த மருதநிலம் எனக் கொள்ளக்கிடக்கின்றது. அவ்வாறுள்ளதை எவ்வாறு பாலைநிலமெனக் கொள்வது? மேற்காட்டிய அத்திருத்தலத் தேவாரத் திருப்பாசுரங்கள் ஒவ்வொன்றிலும் செழித்த மருதநிலவளமே மீக்கூறப்பெற்றிருக்கிறது. கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்துள்ள திருத்தொண்டர் புராணசாரத்திலும், ஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய பெரியபுராண வசனத்திலும் இவ் வற்புதச் செயலைப்பற்றி யாதொன்றுங் காணப்பெறவில்லை. ஆகவே, தேவாரத்தானும் பெரியபுராணத்தானும் சுவாமிகள் பாலைநெய்தல் பாடினர் என்பது பெறுதற்கில்லை.

தேவாரத் திருமுறையில் "காரைகள் கூகைமுல்லை களவாகை" என்னும் முதலையுடைய திருநனிபள்ளித் திருப்பதிக வரலாற்றில், 'இத் திருப்பதிகமே அத்திருநனிபள்ளி பாலைநிலமாக இருக்க, அதனை அவ்வூரினர் வேண்டுகோளின்படி நெய்தலாக்குமாறும் பிள்ளையாரால் பாடியருளிய தெனப் பெரியோர் கூறுவர்.' என்றிருத்தலும்,

திருமுறையாராய்ச்சியிற் சிறந்துவிளங்கிய கயப்பாக்கம் சதாசிவச்செட்டியார் தொகுத்த திருமுறைத்திரட்டில் திருநனிபள்ளியைப்பற்றி, 'இது புன்செய் என்றுவழங்கும். பூர்வத்தில் பாலையா

யிருந்ததை ஆளுடையபிள்ளையார் அடியார் வேண்டுகோட். கிணைய நெய்தலாகப் பாடியது. திருக்களிற்றுப்படியாரிற் காணத்தக்கது.' எனக் குறித்துள்ளதும்,

காரைக்குடி சித்தாந்தச் செல்வர் ஸ்ரீ சொக்கலிங்க ஐயா அவர்கள் இயற்றியுள்ள திருத்தொண்டர் புராணசார விளக்கம்" என்னும் நூலிலே, "திருநனிபள்ளி அந்தணர் வேண்ட, சம்பந்தர் தமது தந்தையார் தோண்மீது செல்லுங்கால், அவ்வழி பாலை நிலம்போல வெப்பமா யிருத்தல் கண்டு, தந்தையார்க்கும் உடன் வருவார்க்கும் சூடுதாக்காமே என்று பரிந்து பதிகம்பாட, உடனே வெப்பநீங்கி மருதநிலமாகக் குளிர்ந்தது. மேலும் அதுவே நெய்தல் நிலமாய்க் கடற்காற்று வீசியது." என வரைந்து, அதற்குப் பல மேற்கோள்களையும் எடுத்துக்காட்டி யிருத்தலும் இவ்வற்புதச் செயல் நிகழ்ந்ததுண்மை யென்பதை அறிவித்தற்குரிய ஆதாரங்களாம்.

இவ்வாதாரங்கட்கு அநுகூலமாவன.—நம்பியாண்டார் நம்பி அருளிய,

"நாத னணிபள்ளி சூழ்நகர் கானக மாக்கியஃதே
போதின் மலிவய லாக்கிய கோனபர் பொற்புகலி"

என்னும் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி 17-ஆம் பாடலும்,

"கள்ளம் பொழினனி பள்ளிக் கடங்கட மாக்கியஃதே
வெள்ளம் பணிநெய்த லாக்கிய வித்தகன்'

என்னும் ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் 4-ஆம் செய்யுளும்,

"ஞாலத் தினரறிய மன்னுநனி பள்ளியது
பாலை தனைநெய்த லாக்கியும்"

என்னும் ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை 75-ஆம் கண்ணியும்,

"தாழுஞ் சரணச் சதங்கைப் பருவத்தே
பாலையு நெய்தலும் பாடவலான்"

என்னும் ஆளுடைய பிள்ளையார் திருத்தொகைக் கண்ணியும்,

"பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் காங்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தங்,
கரணம்போ லல்லாமை காண்."

"ஓடுஞ் சிவிகை உலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல்—ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்."

எனச் சித்தாந்த சாத்திரங்களு ளொன்றாகத் திருக்கடவூர் உய்ய வந்ததேவ நாயனார் அருளிய திருக்களிற்றுப்படியார் 12, 70-ஆம் திருவெண்பாக்களும், பிறவும் ஆகும்.

இவ் வாசிரிய வசனங்களுள், திருவந்தாதிச் செய்புளால் திருநனிபள்ளி சூழ் நகரைக் கானகம் (முல்லைநிலம்) ஆக்கிப் பின்பு அதனையே மருத (வயல்) நிலமாக்கியருளினர் எனவும், திருச்சண்பைவிருத்தத்தால் முல்லையாக்கி அதனையே நெய்தலாக்கியருளினர் எனவும், திருவுலா மாலையால் பாலையை நெய்தலாக்கியருளினர் எனவும், திருத்தொகையால் பாலையாகவும் நெய்தலாகவும் பாடியருளினர் எனவும் பெறப்படுவன காண்க. இவ்வாற்றல் திருஞானசம்பந்தர் திருநனிபள்ளியில் திணைமயங்கத் திருப்பதிகம் பாடியருளினதுண்மையே யென்பது உறுதியாகின்றது.

> "பொன்னி வடகரை சேர்நாரை யூரிற் புழைக்கைமுக
> மன்ன னறுபத்து மூவர் பதிகே மாபுசெயல்
> பன்னவத் தொண்டத் தொகைவகை பல்குமந் தாதிதனைச்
> சொன்ன மறைக்குல நம்பி..."

என்றதால், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருள நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியைச் செய்தருளினர் எனத் தெளிவாகிறது. அத் திருவந்தாதியில் திருஞானசம்பந்தர்க்குரிய இரு செய்யுட்களில்,

> "கொந்தார் சடையர் பதிகத்தி லிட்டடி யேன்கொடுத்த
> அந்தாதி கொண்ட பிரானருட் காழியர் கொற்றவனே."

எனக் கூறியிருத்தல் கொண்டு நம்பியாண்டார் நம்பியே ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி செய்தருளினவர் என்பது தெள்ளிதிற் புலனும். ஆகவே, திருத்தொண்டர் திருவந்தாதியிற் பாலை நெய்தல் பாடியது கூறப்பெற வில்லையாயினும், ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருவுலாமாலை, திருத்தொகை முதலியவைகளிற் கூறப்பெற்றிருத்தல் கொண்டு, இவ்வற்புதம் நடந்தது உண்மை யெனவும், அது நிகழ்ந்த இடம் திருநனிபள்ளியே எனவும், அவ்வாறு நிகழ்தற்கு அருளிப்பாடியவர் திருஞானசம்பந்தரே எனவும் சந்தேக விபரீத மின்றிச் சாதிக்கத்தக்கன வேயாம்.

இவ்வாறிருக்க, ஆசிரியர் அருண்மொழித் தேவர் தமக்குப் பேராதாரமாகக் கொண்டுள்ள நம்பியாண்டார்நம்பி யருளிய ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி முதலிய பலவற்றினும் வெளிப்படையாகக் கூறியிருக்கும் இவ்வற்புதச் செயலைப் பெரியபுராணத்திற் கூருத காரணம் என்னே? என அறிஞர் பலரும் சங்கை செய்கின்றனர். திருமுறை யாராய்ச்சியே உயிர்க்கு உறுதுணையாகக் கொண்டுள்ள பேரறிஞர்கள் இதுபற்றிய தங்கள் கருத்தை வெளியிடின், சங்கை தெளிய மிக்க சாதகமாமெனக் கருதுகின்றேம்.

உ

# உலகிற் சிறந்தது எது?

திருவையாறு, தமிழாசிரியர் திரு. இ. கோவிந்தசாமி பிள்ளை
அவர்கள், தமிழ்ப்பொழிலில் எழுதியது.

(திங்கள்-௯: 196-ம் பக்கத் தொடர்பு.)

உலகிற் சிறந்த பொருள்:—'ஏழுடை யான்பொழில் எட்டுடை யான்புயம் என்னை முன்னாள், ஊழுடையான்' எனத் திருச்சிற்றம்பலக்கோவையாரினும், 'எல்லா வுலகமு மானாய் நீயே' எ—ம், 'ஏழுலகும் ஏழ்மலையு மானான் கண்டாய்' எ—ம், 'ஆண்டுலகேழ் அனைத்தினையும் வைத்தார் தாமே' எ-ம், 'ஈசனா யுலகேழு மலையு மாகி' எ-ம், 'ஒருவனா யுலகேத்த நின்ற நாளோ' எ-ம், 'ஏற்றானை யேழுலகு மானான் தன்னை' என்றும் திருத்தாண்டகப்பதிகங்களினும், பிறவிடங்களினும் குறிக்கப்படும் உலகத்திற் சிறந்தபொருள் யாதெனின், 'சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்,' எ-ம், 'எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி' என்றும் சிறப்பித் தோதப்பெறும் செம்பொருளாகிய பரமசிவமன்றோ? அவ்வனஞ் சிவமே சிறந்த பொருள் எனப்படுகின்றுழி சிவனென்னுஞ் சொற்பொருள் யாதென நாடிச் செல்வம். சிவன் என்னுஞ் சொற்கு, நலம், இன்பம், மங்கலம் ஆயவற்றைத் தந்தருள்பவன் எனப் பொருள்படுகின்றது. இங்ஙனமாகப் பிற கடவுளுக்குப் பெயருண்டா? அளிக்கு மாற்றல்தானும் உண்டோ? எனின், இன்றென்றலே தேற்றமாம். பட்டினத்து அடிகளும் ௰௧-ஆம் திருமுறையின்கண் 'வாழ்வாக வுந்தங்கள் வைப்பாக வும்மறை யோர்வணங்க, ஆள்வாய் திருத்தில்லை யம்பலத் தாயுன்னை யன்றியொன்றைத், தாழ்வா ரறியார் சடனஞ்ச முண்டிலை யாகிலன்றே, மாள்வார் சிலரையன் றோதெய்வ மாக வணங்குவதே' எனப் பகர்வதாலும் அஃதினிதினுணரக் கிடக்கும்.

உலகத் துயிர்களனைத்தும் இன்பத்தையன்றோ நாடுவன. இவ்வின்பத்தை யளிப்பவன்றானும் எல்லாவுலகிற்கும் இறைவனாகிய சிறந்த பொருளாம் சிவனேயாவன். இன்னும்,

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படுமி றக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே."

எனச் சிவஞானச் சித்தியாரும்,

"சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றொப்பாற்
சோர்விலடை யாற்றெளிந்தோஞ் சோமேசா—வோரில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

எனச் சிவஞான முனிவர் பாடலும்,

"கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை"

எனப் பொதுமறைக் குறளும் கூறுதல் கொண்டு மது துணியப்படும்.

தொன்னூற் பொருளைத் துருவித் துணிந்துரைக்கும் நடுநிலையாளரா கிய பரிமேலழகரும் இக் குறளுக்குச் சிறப்புரையில் "எண்குணங்களா வன.—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை" எனவிவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது என மேற்கோணிறீஇ, பிறவாறு முரைப் பாருமுளர் என உரைத்துள்ளார்.

புறச்சான்றுகளும் கூறுதும். அவை வருமாறு:—கண்டுமுட்டு (கண் டால் தீட்டு), கேட்டு முட்டு (கேட்டால் தீட்டு) என்றுரையாடிச் சைவத் தையழிக்குஞ் சமணரும் தம் நூலாகிய சிந்தாமணியில் சிவபெருமானைப் 'போக மார்த்த புண்ணியன்' என்று கூறியிருத்தலும், புத்த நூலாகிய சிலப்பதிகாரம், மணிமேகலையில் "பிறவா யாக்கைப் பெரியோன்" என்றும், "நுதல்விழி நாட்டத் திறையோன்" என்றும் கூறியிருத்தலும், புறப்பாட் டில் "முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" என்றும், கலியில் 'படரணி யந்திப் பசுங்கட் கடவுள்' என்றும் கூறியிருத்தலும் எப்பொருளைக் குறித் துள்ளன? நம் சிவபரம்பொருளை யன்றோ!

கம்ப ராமாயணத்தில்,

"பற்றவா வேரொடும் பசையறப் பிறவிபோய்
முற்றவா வுணர்வுமேன் முடுகினா ரறிவுசென்
றுற்ற வானவன்" என்றும்

வில்லிபாரதத்தில்,

"இன்னம்பல பலயோனியி லெய்தாநெறி பெறவே
முன்னம்பல ரடிதேடவும் முடிதேடவு மெட்டா
அன்னம்பல பயில்வார்புன லணிதில்லையு ளாடும்
பொன்னம்பல நாதன்" என்றும்,

"ஓரேனந் தனைத்தேட வொளித்தருளு மிருபாதத் தொருவனந்தப்
பேரேனந் தனைத்தேடப் புறப்பட்டான்" என்றும்,

"தேவரு மறையு மின்னமுங் காணாச் செஞ்சடைக் கடவுள்"

என்றும் வருவனவற்றையு மேலவற்றொடு படுத்திப் பொருளை யாராயத்தக் கது.

'போக மார்த்த புண்ணியனே' என்னுமடியின் சிறப்புரையில் நச்சி னார்க்கினியரும்,

"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேல் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

என்னும் திருவாசகச் செய்யுளை மேற்கோள் காட்டியிருக்கும் வனப்பினை யுங் காணல் வேண்டும்.

இங்ஙனமாக வுலகிற் சிறந்த பொருளாகிய சிவபரம் பொருளைத் தெளிந்துய்தற்குரிய நூல்களை யாராய்ந்து ஒழுகு நெறியே சைவசமயம்

ஆம். சிறந்தபொரு ளிதுவெனத் தேறிய ஞான்று அதனை யடைதற்குரிய நெறியை நாடுவது மக்களியற்கையாகலின் அதனையு மிதனோடு படுத்திச் சுருங்கக் கூறுவன்.

மதம் என்னும் மொழியால் வழங்காமல், சமயம் என்னும் மொழியால் வழங்கிவரலே இச் சைவத்திற்குப் பெரிதுமேற்ற முடைத்தாதலை யுணர்த்தாநிற்கும். மற்றைக் கடவுளரை வழிபடுநெறி முதலியவற்றை யுணர்த்து மாற்றை மதம் எனும் சொல்லால் உணர்த்தப்படுகின்றது. புத்தமதம், சமண மதம், விண்டுமதம் முதலியனவாக வழங்கப்பெறுதலையு மாராய்தல் வேண்டும்.

சமயம்:—காலநிலையறிந்து ஆவன தெளித்தலானே சமயம் எனப் பெயர் வந்தது. இதனையறிந் தாவன செய்தலான் சமயாசாரியர் (சமய குரவர்) எனப் பெயர் போந்துள்ளது. சமயம் நெறி இரண்டும் ஒன்றெனினும் ஒக்கும். சைவசமயநெறி யென்புழிப் பிறிதாகலுமாம். சமயம்—ஆன்மநிலை, ஆன்மா அநாதி; இறைவன் அநாதி; பாசம் அநாதி; பசு பதி பாசமாகிய இம் முப்பொருளையு முணர்த்துவனவே ஆகமம். இப்பொருளையறிவுறுப்பதுவே சைவசித்தாந்தம். வேதமுடிபாகிய முடிபை முடிப்பது (முடிந்ததை முடிப்பது) என்பது பொருளாகும்.

'சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார மூந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே'

என்பது அருணைக்கலம்பகச் செய்யுளாம். இதனைக்கொண்டு மேற் கூறப்பட்ட சமயப் பரப்பினையும் ஒருவாறு விரிக்குதும். மேற்கூறியாங்கு அநாதியாயுள்ள ஆன்மாவிற்கு எங்ஙனம் வினைத்தொடர் பேற்பட்டுள்ளது என வாராய்தல் வேண்டும். அநாதியாயுள்ள ஆன்மாவொடு, அநாதியாயுள்ள இறைவனாகிய சிவபரம்பொருளும், அநாதியாயுள்ள பாசங்களும்கலந்திருத்தலின் நல்வினையும் தீவினையும் வந்தவெனச் சமய (சாத்திரங்கள்) நூல்கள் சாற்றுகின்றனவாகையால், அநாதியாகவே இருவினைகளு மேற்பட்டுளவெனக் கொள்ளக்கிடக்கின்றது. ஆகலான், ஆன்மாவிற் கிருவினைகளும் அநாதியாகவே யுள்ளன வாயின. இவ்விருவினை நீங்கிச் சிவஞானமுற்று விட்டைகூடித் தெளிந்து இறைவனது மலரடிகளை யடைவதே வீடாகும்.

'ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.'

என்னும் ஔவையா ரருளிப்பாடலும் நோக்கல்வேண்டும்.

இவ்விருவினைத் தொடர்ப்பா டறுத்தற்குச் சமய நெறியும் ஞானமும் வேண்டப்படும். கடவுள் உண்டெனுங் கருத்தொடு சமயநூற் கலைகளையுணர்ந்து சிவஞான முற்றாலன்றி யிறைவன் றிருவருட் பேற்றிற் கிலக்காக முடியாது. சமயம் யாருக்கு வேண்டும்? கீழ்ப்போன வறிவினையுடைய உயிர்த்தொகுதிகட்குப் பகுத்துணர்வு(நன்று-தீது, பொய்ப்பொருள்-மெய்ப்

பொருள் முதலியவற்றை யுள்ளவாறுணரு முணர்வு) இன்மையானவைகட்குவேண்டற்பாலதன்று. பகுத்துணர்வுடை மக்கட் பிறப்பினருக்கே சமயம் மிகவும் வேண்டப்படுவதாகும்.

ஏனெனில், சிறுவிதியாம் தக்கனுர், தாருகவன முனிவரர் முதலாயினுர் சமயநெறி தப்பினவராய்ச்சிவபெருமானையன்றி மற்றையரைக் கடவுளரெனக் கருத்துட்கொண்டும், தாந்தாஞ் செய்யும் வினைகளே பயனை நுகரச் செய்யுமன்றிக் கருத்தா வொருவனிலனெனக்கொண்டும், எண்ணிய வெண்ணியாங் கெய்தப்பெருதவராய்ச் சருமமுங் கைகூடப்பெருதவராய் அழிந்தொழிந்தனரன்றே? ஆகலான், சமயம் வேண்டப்படுவதாய் சிலர், சைவசமயமே ஆசாரியர் காலத்தது எனவும், அதற்குத் தொன்மை யேதெனவும் கூறுநிற்பர். எல்லாம் வல்ல சிவபெருமானுக்குப் பிறப்பு இறப்பு உண்டா? காலமுண்டா? வினைகளுண்டா? எனின், இன்றேயாம். மேற்கூறியாங் குலகிற் சிறந்த பொருளாம் சிவபரம் பொருளின் இயல் யாதெனச் சிறிதாராய்வன்:—

"வைச்ச பொருணமக் காகுமென் றெண்ணி நமச்சிவாய
அச்ச மொழிந்தேன் அணிதில்லை யம்பலத் தாடுகின்ற
பிச்சன் பிறப்பிலி பேர்நந்தி யுந்தியின் மேலசைத்த
கச்சி னழகுகண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே"

'தாயுமிலி தந்தையிலி தான்றனியன்'

'காலங் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே'

'நம் சேணேசர், இல்லிற் பிறந்தகதை யுங்கேளோம்'

"ஆற்றுங்காற் கஞ்சத் தவர்தா மரைக்கண்ணர்
சாற்றுங்காற் கண்ணரவர் தந்தையார்—கீற்றுமதி
சூடும் பெருமானைச் சோணகிரி வித்தகனைத்
தேடுவதிங் கெப்படியோ சேர்ந்து."

என்று கூறுமாற்றுல் இவைகளைக் கடந்தவன் என்றேயன்றே பொருள் புலனுகின்றது. இவற்றினைக்கொண்டே யப்பரம்பொரு ளிலக்கண்முந் தெளியக்கிடக்கின்றது.

சிவபெருமானை வழிபடுநெறியே சமயநெறி, பிறநெறி சமயநெறி யன்று. சிவபெருமானே பரம்பொருள் எனக்கொண்டு வழிபடுமாறே சைவசமயம். சிவத்தொடர்பு சைவம். அதனை மேற்கொண்டொழுகுமாறே சமயமாம். இச்சமயமே எச்சமயத்தினு மேலானதென்பது பிற சமயங்களைத் தழுவி யவற்றினுண்மைகளை நன்குவெளியீடு செய்து, பின்னர்த் தன் னுண்மை நிலையினை வெளியீடு செய்கின்றது. தன்னிலையினை நிலை நிறுத்துவது சித்தியார் சுபக்கம் பரபக்க முதலிய ஞானநூல்களாற் பெரிதும் இது விளங்கக்கிடக்கும். இப்பெற்றித்தாகையால் நுண்ணூலாய்வாரும் இதனை யெவ்வாற்றுனும் ஒப்பாமலிருக்க முடியாது.

**சமயப் பரப்பு:**—இங்ஙனமாக சமய நெறிக்கணின்று ஒழுகுமாறு நால்வகைப்படும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என ஒவ்வொன்றும் நந்நான்காய்ப் பதினறு பகுதியவாம். இவைகளையே சிவாகமங்களும் தேவாரமாகிய திருமுறைகளும், சிவஞானபோதமுதலிய அறிவுநூல்களும் கூறுகின்றன. இவற்றின் சிறப்பியல்களையு மவ்வந் நூல்களிற் காணல்வேண்டும்.

உலகின்கண், தாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம் எனச் செய்தவர் சமயாசாரியர் நால்வருமே யாவர். சமய நெறியினை யுணர்த்தினமையானும், காலநிலை முதலியன வுணர்த்தினமையானும் ஆப்பெயர் பெற்றனர் போலும். மக்கட் பிறப்பினருக்கு உறுதிப்பொருளும் நான்கு. அவைகளையடைவதற்குரிய நெறிகளும் நான்கு. அவைகளைக் கூறினரும் நால்வர். அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய நெறிகளைக் கடைப்பிடித்தற்குரிய தீட்சைகளும் நான்கு. முத்திப் பேறு நான்கு. இங்ஙனம் யாவு நான்காகவே வருதலையும் நன்காராய்தல்வேண்டும். இறைவன், ஆன்மா, பாசம் என்னு முப்பொருளும் அநாதியென வுணர்த்தினரு மிவர்களே யாவர்.

சமய நெறியினை யுணர்ந்து நிலை:—பதி, பசு, பாசம் எனு முப்பொருள்களையு முணர்த்து நூல்களே சிறப்புநூல்கள் எனப்படும். அவைகளே யாகமங்கள். அவைகள் கூறுவனவே நால்வகைநெறி. இவைகளைப் பயிறற்கு (அநுட்டித்தற்கு) தீட்சையும் வேண்டும். தூய்மைக்குறி என்று பொருள்பட திரிக்கலாமெனத் தோன்றுகின்றது. அவைகள், சமயம், விசேடம், நிருவாணம், ஆசாரியாபிடேகம் என்பன. இவைகளைச் செய்தற்கு ஆசிரியர் வேண்டும் (குருபத்தி, இலிங்கபத்தி, சங்கமபத்தி) என்னு முறையிலு மிது கொள்ளக்கிடத்தலின். இவர்களையே தீட்சாகுரு ஞானகுரு, என விளிப்பார்கள். நூலாசிரியர்கள் எல்லாம்வல்ல விறைவன் திருவடிப் பேறுறற்குக் குருபத்தி இலிங்கபத்தி அடியார்பத்தி என்னு மூவகையான வன்பும் வேண்டும்.

> "நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
> யல்லாது வேறு நிலையுள தோவகை மும்புறனும்" எனவும்,
>
> "பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்தால்
> நல்லறிவு சற்றே நகும்" எனவும்

வரும் பாடல்களியாவும் அவற்றினையே வற்புறுத்துகின்றன.

இவைகளாலடையுர் பேறுதாமும், சிவசாலோகமும், சிவசாமீப்பியமும், சிவசாரூபமும், சிவசாயுச்சியமும் (சிவனுலகுபுகல், சிவனுண்மையினுறல், சிவனுருவு கொளல், சிவனொடு கலத்தல்) எனு நான்குமேயாம். இத்திறனின்றே நஞ்சைவசமயத் தொண்டர்களாயினரியாரும் வீடு பேறுற்றனர் என்று திருமுறைகள் செப்பாநிற்கும். இப்பெற்றிதாமும் பிறமதத்தினருக்குண்டா? இடையாதென்றே திட்டமாய்ச் செப்பறகும். நமதருட்குரவரானவர் வாலையுரைக்க வடிகளும் அருட்குறியாகிய இலிங்கவடிவத்தின்கண் இப்பொருள்களையு நன்கு விளக்கியுள்ளார்கள். அச்சித்தாந்தப் படத்தா லிதுதுணை நூபாலதாகும்.

சமயப்பெரியார்கள் உலகிற் சிறந்தபொருளாகிய சிவபெருமானுடைய உருவநிலை, அருவநிலை, அருவுருவநிலை என்னு மூவடிவினையும் போற்றியுள்ளார்கள். ஒருமல முடையார், இருமல முடையார், மும்மலமுடையார் என்னுமுத்திற வான்மாக்கட்கும் இம்மூன்று வடிவுகொண்டு இறைவனருள் புரிகின்றனென்னுங் கலைகள் கழறுதலால் அதுகொண்டும் தெளியல்வேண்டும்.

ஏனை மதங்கள் இங்ஙனம் பாகுபடுத்திக் கூறவுமாட்டா. இத்துறைகளு மவற்றிற் கெட்டாதனவே யாம். நம் பரம்பொருளை யடைதற்குப் பலநெறிகளுண்டு. சைவசமயத்தில் தூய்மைக்குறி தீட்சா முறையில் சூலப்பொறி, இடபக்குறி யிடலு முண்டு. திருவடிதீர்த்தம் வழங்கலும் அருந்த

லுமுண்டு. காலவழக்கி லிவை யிறந்து பட்டனவோ, அன்றி நழுவவிடப் பட்டனவோ அறிகிலம்.

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெயும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே"

"நினைந்துருகு மடியாரை நைய வைத்தார்...........
......... நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்"

இப்பதிகங்களின் அடிக ளிவ்வுற்றினைக் குறிக்கின்றன. தூய்மைக் குறியின்றி யொருவன் தூய்மை யடையவே மாட்டான். இஃது எல்லாமதங்கட்குஞ் சம்மதமாம்.

ஆன்மாக்கட்கு வினையு மூவகைப்படும், பிராரத்தம் சஞ்சிதம் ஆகாமியம் என்பன. நல்லாசிரியரைக் காண்டலினாலும், அவர்களருண்மொழிகளைச் செவியிலேற்றலினாலும் பின்னிருவினைகளும் ஒழியப்பெறும். பிராரத்தவினை யநுபவித்தே யொழிக்கப்பெறும். அங்ஙனமாக நல்லாசிரியருடைய அருட்காட்சியால் அறிவு விளங்கப்பெறும் அவ்வமயத்து,

"திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை
யுருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்"

என்றாங்கே பரம்பொருள் வந்தாண்டடிமை கொள்வன். இறைவனும்,

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்"

ஆகலின் அங்ஙனம் புக்கு நிற்கும் புனிதனாலேயே 'அவனருளாலே யவன்றாள் வணங்கி' என்றாங்கு அவன்றாள் வணங்கல்வேண்டும் என்றலும் மேலோராணை.

இதுகாறும் கூறியவாற்றால் உலகிற் சிறந்தது எது? எனும் தொடருக்கு உலகத்திற் சிறந்தது தென்னாடாம் தமிழ்நா டொன்றுமே யென்றும், மக்கட் டொகுதி யென்றும், அம் மக்கட் டொகுதிக்குச் சிறந்தது சிவபெருமானே பரம்பொருளெனக் கண்டுஇன்பவீடடைதலே யென்றும் பெற்றாம்.

"முன்னொரு சமயந் தன்னைப் பொருளென முற்றி நின்றோர்
பின்னர்வான் சைவ மெய்தப் பெறின்அவர் பேசு மாபோல்"

என்றார் ஒருவர். இறைவ னியலினை அப்பரடிகள் கூறியருளிய வனப்பினைநோக்குவேம். அவ் வருளிப் பாடல் வருமாறு:—

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னி னல்லான்
ஒப்புடைய னல்ல னொருவ னல்லன்
ஒரூர னல்லனோ ருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே"

திருச்சிற்றம்பலம்.

# கணபதி யல்லதோர் கரும மில்லையே.

[கஸ்டாச்சிபுரம் திரு. அ. முத்தைய பிள்ளை யவர்கள்.]

"விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான்—விநாயகனே
விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து."

பல சமயிகளும் தாந்தாமொரு தெய்வத்தை யுபாசிக்கின்றனர். ஆயினும், எச்சமயிகளாயினும் தாமியற்றும் எல்லாச்சுபாசுபகாரியங்களையும் முதன்முதல் கணபதி வணக்கஞ் செய்தே நடாத்துகின்றனர். இம் மூர்த்திக்கு விநாயகர், விக்கிநேஸ்வரர், லம்போதரன், கஜானனன், ஏரம்பன், கணபதி, பிள்ளையார் என எண்ணிறந்த திருநாமங்கள் வழங்கப்படுகின்றன. விநாயகர் என்பதற்கு தன்னினு மேலாந் தலைவனின்றித் தானேதலைவனாய்நிற்கு மேன்மையன் என்பது பொருள். (நாயகன்—தலைவன்)

"மலைமக வீன்றருள் யானைக் கன்றை வந்தனை செய்கிலார்
முயறரும் கருமம் பொன்றும்"

என்றபடி எல்லாவற்றிற்கும் இறைவனாய் விளங்கு மிவரைப் பூசித்தன்றி எக்காரியமும் தொடங்கலாகா. அவ்வாறு தொடங்கி லக்காரியம் துனுக்குறும். முன்னர்ப் பூசித்தோர்காரியம் முட்டின்றி முடிவுறும். காரியசித்தியாகும் பொருட்டே எச்சமயத்தினரும் தத்தம் மதக்கடவுளரைப் பூசிக்குமுன் விக்கிநேசுவரரை வணங்குகின்றனர். இதனை,

"எல்லாப் பயனு மெளிதளிக்கு மியல்பா னிந்தப் பெயர்தனை
நல்லா கமத்தின் வழிநடக்கும் நவியாச் சைவ ரேயன்றி
யல்லாச் சவுரர் சாத்தர்வயி ணவர்கண் முதலா மதத்தோருஞ்
சொல்வர் நின்று பயன்பெறுவர் துதிக்கை யானைத் துதியாரார்"

என்பதாலறிக.

சிருட்டியாதி யைந்தொழிலுக்குங் காரணமாயுள்ளதும், மந்திரங்க ளெல்லாவற்றுஞ் சிறந்ததுமாகியது பிரணவம். பிரணவம் 'அ, உ, ம்' என்னும் மூன்றெழுத்துக்களுங் கூடியது. 'ஆரும் அறியார் அகாரம் அவனென்று, பாரும் உகரம் பகர்ந்திட்ட நாயகி' என்பதால், அகார உகாரங்கள் முறையே சிவத்தையும் சத்தியையுங் குறிக்கு மென்பது வெள்ளிடை. அகர உகரங்களாகிய சிவமுஞ் சத்தியுங்கூடி விநாயகர் பிறத்தலின் அவருக்குப் பிரணவ வெழுத்தாகிய 'ஓ' என்னும் உருவத்தை யொத்த முகம் விளங்குகிறது. இதனால்

சத்திசிவ ரூபமே கணேசமூர்த்தியென்றும், இவ்விரு வுருவங்களுக்கும் பேதாபேத மில்லை யென்றும் புலனாகின்றன. இதனை,

‘திருவுரு விரண்டன் மாட்டுஞ் சிவணிய வத்து வொன்றே’
‘ஒத்தன வண்டா யந்த வுருவிரண் டினுக்கும்’
‘என்னின் வேறுமா காமலென் பிள்ளையா யிருக்கும், நின்னை’

என்னும் பார்க்கவ புராணச் செய்யுட்கள் வலியுறுத்தாநிற்கும். சத்து சித்து என்னுமிவ் விரண்டுஞ் சேர்ந்த ஆனந்தமாகிய ‘முருகர்’ அவதரித்தனர் என முதியோர் மொழிவர். ஆதலின்; நம் கணபதியுங் கந்தனு மொருவரே யெனல் மிகையாகா. எவனொருவன் விநாயக வணக்கத்தை மேற்கொண்டுள்ளானோ அவன், சத்தி, சிவம், முருகர், விநாயகர் ஆகிய மூர்த்திகளின் அருளுக்குப் பாத்திரனாகின்றான்

இனி, விநாயகர் தனக்கு மேலொரு நாயகனின்றித் தானே தலைவனாய் விளங்குபவர் என்பதை விளக்கச் சிவபெருமான்,

“என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதன்
முன்னரே யுனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை
யுன்னலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ”

எனக்கூறினர். இதில் ‘என்னரேயாயினும்’ என்பதற்கு ‘எத்தகையோராயினும், அதாவது தானேயாயினும்’’ எனக்கூறினர் என்பது பொருள். ஏனெனில், விநாயகரை யுன்னாது சிவபெருமான் திரிபுரதகனத்திற்குச் செல்லுகையில் அச்சு முறிந்துவிட்டதா லென்க. சிவபெருமானே நம் கணேசரைக் கருதி அவரது அருளை வேண்டினரென்றால் நம்போலியர்க்குச் சொல்லவும் வேண்டுமோ? திசைமுகன் தனது சிருட்டித்தொழில் துவக்கியபோது நம் கஜானன மூர்த்தியைக் கைதொழாத காரணத்தால், அவன் கருத்துப்படி தோன்றாமல் வேற்றுருக்களாகி பிரமனைப் பயமுறுத்தலாயின. பின்னர், தன் குற்றத்தை யுணர்ந்து கணபதியைத் துதித்துத் துன்பநீங்கப் பெற்று சிருட்டி செய்யத்தொடங்கினான். முட்டின்றி முடிந்தது. வெற்றி வேற்கைப் பெருமான் வேடுவ கோலந் தாங்கி வள்ளியை மணக்கச் சென்ற காலையில் கணபதியை யுன்னாத காரணத்தால் காரியம் விரைவிற் கைகூடாதது கண்டு தோத்திரஞ் செய்யலாயினர். பின்னர், விநாயகப் பெருமான் சென்று அம்மணவினை முடித்தனர்.

“அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடு
மப்புன மதனிடை—யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள்—பெருமாளே”

விநாயக வணக்கமானது விரும்பியது விரும்பியவாறே விரைவிலளிக்கும் மேன்மைவாய்ந்தது. சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான்பெருமா ணாயனாரும் கைலைக்குச் சென்றதைக் கேள்வியுற்ற நற்றமிழ்ப் பேரன்னையாகிய ஒளவையார் தாமும் ஆண்டுச் செல்லக் கருதி, ஆனைமுகத்தண்ணலை 'சீதக் களபச் செந்தா மரைப்பூம்' என்னும் அகவற்பாக் கூறி அதிவிரைவிற் பூசை புரியலாயினர். அதுகண்ட கருணைமதம் பொழியுங் கரிமுகத்தெந்தை, அம்மே! நின்கலக்க மொழிக. யான் அன்னோருக்கு முன் உம்மைக் கைலையிற் சேர்க்கின்றேன் எனக் கூறிப் பூசைமுடிந்தபின் சேரமானுக்கு முன் அவ்வம்மையைக் கைலை சேரச் செய்தனர். சீகாழியிற் றிருநந்தனவனம் செங்கதிரோன் வெம்மையாற் றீய்வது கண்ட தேவர்கோன் சிந்தைநொந்தயர்ந்து விநாயகப் பெருமானது திருவடித் தாமரைகளைப் பக்தி சிரத்தையோடும் சிந்திக்க, அவன்பாற் கருணை கூர்ந்து அகத்திய முனிவரது கமண்டல ஜலத்தைக் காக்கையுருக் கொண்டு கவிழ்த்து அதையோ ராறெனப் பெருகச்செய்து அந்நந்தனவனஞ் செழிப்பறச் செய்தனர். அதுவே தற்போது 'காவேரி' என வழங்கப்படுவதாகும். இவ்வாறாக நம் கணேசப் பெருமானைத் துதித்துக் காரியசித்தி பெற்றவர்கள் எண்ணிறந்தவராவர்.

விநாயகப்பெருமானைக் காரியசித்தியின்பொருட்டு வணங்கியருள் பெற்றவன் எப்போது முபாசித்து மேன்மையடையவும், காரிய ஆனியுற்றவன் காரியசித்தி கருதியாவது தொழுது மேன்மையடையவும் கூடும். ஆகலால், பெருமான் நிர்விக்கினமும் விக்கினமும் புரிதல் உயிர்கண்மாட்டுக் கொண்ட பேரருளே.

'அவனன்றி யோரணுவும் அசையாது' என்றபடி 'கணபதி யல்லதோர் கருமமில்லை'' யென்பதாம். விநாயகப் பெருமான் எங்கணும் நிறைந்து விரும்பி வணங்கு மடியார்க்கு வேண்டியன வளித்து விளங்குபவராதலின், நம் மேலோர்கள் மக்களுக்கு இம்மூர்த்தியின்பாற் பக்தி பெருகச் செய்வான் விரும்பி ஒவ்வொரு ஊர்களிலும் குளக்கரைகள் சந்திகள் வழிகள் தத்தம் இல்லங்கள் ஆதியஇடங்களிலெல்லாம் விநாயகரைத் தாபித்து வணங்கும் வழக்கத்தை மேற்கொண்டனர்.

அகரமென அறிவாகி உலக மெங்கும்
　　அமர்ந்தகர உகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
　　பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொரு ளுண்கினைப் மிடர்தீர்த் தெய்தப்
　　போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
　　நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

உ

# இந்துமதக் கொள்கைகளும் சுகாதாரங்களும்.

(திங்கள்-௩: 127-ம் பக்கத் தொடர்பு)

கண்டாச்சிபுரம் திரு. அ. முத்தையா பிள்ளை அவர்கள்.

4. மலசலங்கழித்தல்:—மலசலங்கழிக்கும் நேரம் காலை மாலையாகிய இருவேளையாம். ஒவ்வொருநாளும் மலசல விசர்ச்சனத்திற்காகக் குறைந்தது அரைமைல் தூரமாவது செல்லவேண்டும். சுகாதாரத்திற்குத் தேகப்பயிற்சி இன்றியமையாத தொன்றாகலின், காலைமாலை இருவேளைகளிலும் நடப்பதுவே தேகப்பயிற்சி செய்ததாகிறது. இதனால், இரத்தவோட்டங்கள் செவ்வனே நடைபெறும். இரவு முழுதும் ஓய்விற்கிடந்த அவயவங்கள் தத்தம் வேலைகளைச் சோர்வின்றிச் செய்யக்கூடிய வலிமையும் இந் நடைப் பழக்கத்தா லேற்படுகிறது. ஊருக்கு வெளியிற் சென்று மலஜலங் கழிப்பதால் அதனாலேற்படும் துர்நாற்றங்கள் கிராமத்திற் பரவா. சமீபத்திற் கழிப்பின் கிராமத்திலுள்ள பிராணவாயு கெட்டு மாந்தர்க்கு நோய் வருவிக்கும். இதனாலேயே நம்முன்னோர்கள் ஊர்ப்புறத்தே அரைமைல்தூரஞ் சென்று மலசலங் கழித்தல் வேண்டுமென வகுத்துள்ளார்கள். மலங்கழிக்குங்கால் வாய்பேசா திருத்தல்வேண்டும். பேசினால் அக்கெட்டவாயு வாய்மூலம் உட்சென்று கெடுதியை விளைக்கும். நாசித்துவாரங்களில் கெட்டவாயுவைச் சுத்தப்படுத்தும் சக்தியிருப்பதால் மூக்கினால் சுவாசிக்கலாம். தற்போதைய நகரவாசிகள் தத்தம் வீட்டுக் கொல்லைப்புறத்திலேயே 'கக்கூஸ்' கட்டிக்கொண்டு மலங்கழிக்கின்றனர். அத் துர்நாற்றத்தா லேற்படும் கெடுதியை யவர்கள் உணர்வதில்லை. இக்கெட்ட பழக்கம் கிராமவாசிகள் சிலரிடத்திலுமிருக்கிறது. அதனை முற்று மொழிக்கவேண்டிய தவசியம். சிலர் மலவுபாதை யேற்படுங்கால் அதையொருவா றடக்கிக்கொண்டு தம் வேலைமேற் சென்று விடுகின்றனர். இதனால் மலந்தீய்ந்து சிக்கலேற்பட்டுச் செவ்வனே கழிவுறாது தடைப்படுகின்றது. அக்கால் உணவும் சரிவர உட்கொள்ள முடியாது. உண்ட உணவும் ஜீர்ணமாகாமல் வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு முதலிய நோய்வாய்ப் படுத்தும். ஆகையால், மலசலத்தை ஒருபோதும் அடக்காமல் அப்போதைக் கப்போது (காலை மாலை) கழித்தல் வேண்டும்.

"திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்-உண்ணுங்கால்
நீர்சுருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி."

என்பதை யுற்றுநோக்கி யுணர்வீர்களாக.

5. பல்துலக்கலும் ஸ்நானஞ்செய்தலும்:—காலையில் மலசலங் கழித்தபின் வாய்கொப்புளித்து ஆலம்விழுதேனும், வேலங்குச்சேனும் கொண்டு அமைதியா யோரிடத்தமர்ந்து பல் துலக்கல் வேண்டும். நடந்துகொண்டே பல் துலக்கினால் குச்சுகளி லுள்ள செதில்கள் சரீர அசைவினால் பல்லீறல்களிற் பட்டு இரத்தம் வெளிப்படும். மேற்கண்ட குச்சுகளாற் பல் துலக்கின் அதிலுள்ள துவர்ப்பு நம் பற்களை வலுப்படுத்துகிறது. பற்களின் இடுக்குகளிலுள்ள அழுக்குகளை அறவே அகற்றுவதோடு அக்குச்சுகளால் நாவிலுள்ள அசுத்தங்களை வழித்தெறியவும் ஏதுவாகிறது. இதுதவிர்த்து தற்காலத்திய நாகரீகச் சிறுவர்கள் கரித்தூள், காப்பிப்பொடி, மண் முதலியன கொண்டு விளக்குகின்றனர். அந்தோ! இதனால் பற்களின் இடுக்கிலுள்ள அசுத்தங்களோடு இவையுஞ் சேர்ந்து அசுத்தமடைகின்றன. நாக்கிலுள்ள பசையும் கழிய வழியின்றி அதனால் வாய் நாற்றமேற்பட்டு அண்மையிலிருப்பது அருகில் உட்கார எவரும் ஆசங்கிதங் கொள்கின்றனர். ஆகையால், எவ்விதத்திலும் குச்சுகொண்டு விளக்குதலே நன்மை யெனக்கொண்டு நடத்தல் வேண்டும். பின்னர், ஸ்நானம் செய்ய ஆறு, குளம், கேணி முதலியவற்றிற்குச் சென்று ஆடைகளை யழுக்கெடுத்து உலரவைத்துவிட்டு ஸ்நானம் செய்தல்வேண்டும். குளிர்ந்த நீரில் உயிர்ச்சார சத்து கலந்திருப்பதால் ஸ்நானம் செய்பவர்களது சரீரம் நன்கு வலிமையடைந்து வளர்ச்சி யடைகிறது. தேகத்திலுள்ள அழுக்குகளை நன்றாய்த் தேய்த்தால்தான் அவ்வுயிர்ச்சார சத்து மயிர்க்கால்களின் வழியே உட்செல்ல ஏதுவாயிருக்கும். ஆகையால், எப்பொழுதும் வெந்நீரிற் குளிப்பதைவிட்டுக் குளிர்ந்த நீரிலேயே குளித்தல்வேண்டும். இவ்வனுஷ்டானிகள சுத்தமான மூளையுடையராய் உஷ்ண சம்பந்தமான நோய்கட்குப் பாத்திரராகாது நீடித்த ஆயுளுடன் வாழ்வர்.

6. பூசைவடக்குப் போசனந்தெற்கு:—பூசை முடித்தபின்னரே போசனம் கொள்ளவேண்டுமென்பது நம் மேலோர்கருத்து. பூசை புரியுங்கால் தேவபிம்பத்தைக் கிழக்குமுகமாக விருத்தி நாம் வடக்கு முகமாகவிருந்துசெய்தல் வேண்டும். பூமியின் மகாசக்தியானது எப்பொழுதும்வடதிசையிலிருந்து தென் திசைநோக்கிச்செல்கிறது. அச்சக்தியானது அத்தேவசொரூபத்திற் றாக்கிப் பூசைபுரியும் நம்மீது படுதலால் அப்பரமான்மாவின் தெய்வீக சத்தியாலும், பௌதிக ஓடக் பாகங்களின் சக்தியாலும், உலோக சம்பந்தத்தினாலுண்டாகும் மின்சாரசக்தியாலும், மந்திரோச்சாரண கிரியைகளினாலும் நம் தேகத்திலுள்ள நாடிகளில் ஒருவித அசைவேற்பட்டு அதனால் உதராக்கினி விருத்தியாகி, சுக்கிலக்கட்டு மலபந்தம் முதலியன நீங்கும். பூசாகாலத் தியற்றப்படும் கற்பூரதீப ஆராதனைகளினால் கண்மல நீங்கிப் பரிசுத்தமடைகின்றது. கற்பூரம், சாம்பிராணி, சந்தனத்

தூள் முதலிய புகைகளினால் நமக்குத் தேகாரோக்கிய முண்டாகின்றது. அவ்வில்லத்திலுள்ள விஷக்கிருமிகள் அப் புகைபட்டவுடன் முற்றுமொழிகின்றன. தொத்துவியாதிகள் கிராமங்களில் பரவுங்கால் சிறிது கற்பூரத்தை வஸ்திரத்தில்முடிந்து எப்பொழுதும் அதை முகர்ந்துகொண் டிருப்பதைக் காண்கிறோம். இதனால் தொத்து நோய்கள் பரவக்காரணமாயுள்ள கிருமிகளைக் கொல்லுஞ் சக்தி கற்பூரத்திற் குண்டென்பது புலனல்லவா? அன்றியும் பூசாகாலத்தில் விபூதி, வில்வம், துளசி, பாலுடன் கலந்தநீர் முதலியவற்றைப் பிரசாதமாக உட்கொள்வதால் நாடிகள் சுத்தமாகி வலுப்பட்டுத் தேக புஷ்டியைத் தருகிறது.

போசனம் தெற்குநோக்கி யிருந்தே கொள்ளல் வேண்டும். வடக்கு நோக்கி யிருத்தலாகாது. ஏனெனில், பூமியின் மகாசக்தியானது வடக்கிலிருந்து தெற்குநோக்கிச் செல்லுவதாக நாம் மேலே கூறினோமல்லவா? அச்சக்தியானது வடக்குமுகமாக விருந்து புசிக்கின் நேரேவயிற்றில் தாக்குகிறது. அதனால் அஜீர்ணம், மந்தம் முதலியன ஏற்பட்டு நம்மை நோய்வாய்ப்படுத்தும். ஒருவேளை போசனத்தையே கொள்ள வேண்டியவர்களான பிதுர்ஸ்தானத்திலிருந்துபுசிக்கிறவர்கள் மாத்திரம் வடக்குநோக்கி யிருந்துண்ண வேண்டுமென்பது சீக்கிரம் ஜீர்ணமாகா திருத்தற் பொருட்டேயாம். வடதிசை அல்லது வடகிழக்குத் திசையிலிருந்து காற்றுவீசும் பருவங்களில் வாந்திபேதி (காலரா) முதலிய கொடியவியாதிக ளேற்படுகின்றன வாதலின், வடதிசையிலிருந்து புசித்தலை முற்றுமொழிக்க வேண்டுமென்பது புலனாகின்றது. தெற்குநோக்கி யிருந்து புசிக்கின் அம்மகாசக்தியானது முதுகில் தாக்குவதால் யாதொரு கெடுதியும் இல்லை. தென்றற் காற்றானது நம்முன் பக்கமாக வீசுதலால் உண்ட ஆகாரம் சீக்கிரத்தில் ஜீர்ணமாவதுடன் சரீரபுஷ்டியையும் கொடுக்கிறது. ஆதலின், தெற்கு நோக்கியிருந்தே நாம் புசித்தல் வேண்டும். தவிர, நாம் சாப்பிடும்போது பேசுதல் கூடாதென்பது பெரியோர்கள் கொண்ட ஓர் அரியமுறையாகும். நம் சரீரத்தில் ஆகாரம் உட்செல்வதற்கோர் குழாயும், சப்தமுண்டாவதற்கோர் குழாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சப்தக்குழல் பேசும் நேரம்போக மற்றைய நேரங்களில் மூடியிருக்குந் தன்மையது. ஆகாரக் குழல் எப்பொழுதும் திறந்திருக்கும். சாப்பிடும்பொழுது பேசுவதால் உணவு தவறி சப்தக் குழாயிற் புகும். அதனால் மூச்சுத்திணறி சில சமயங்களில் மாணாவஸ்தையையுங் கொடுக்கிறது. ஆதலால், நாம் அமைதியாகத் தெற்கு* நோக்கியிருந்து ஒருவருடனும் பேசாமல் உண்ணும் வழக்கத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்.

---

* சைவசமயநெறி கூறும் வகை வேறு.

7. மஞ்சளின் உபயோகம்:—நாம் தினந்தோறும் கறிகளுக்கு மஞ்சட்பொடி கலந்து சமைத்துண்கிறோம். 'மஞ்சளில்லாக் கறி மணக்காது' என்பது நம் தமிழ்நாட்டில் வழங்குமோர் பழமொழி. கறிகளுக்கு மஞ்சள் கலப்பதால் ஒருவிதமான உருசியும் வாசமும் நிறமும் கொடுப்பதோடு அக் கறிகளை யுண்பவனது வயிற்றிலுள்ள விஷக்கிருமிகளும் மடிகின்றன. மஞ்சளுக்கு விஷப்பூச்சிகளைக் கொல்லும் குணமுண்டு. ஆகையாற்றான் கட்டிமுதலிய புண்களுக்கு மஞ்சளரைத்துப் பூசினால் சீக்கிரத்தில் குணமடைகிறது. விஷப்பூச்சிகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பரவாதிருக்கவே வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை முதலிய விசேட தினங்களிலும் பண்டிகை நாட்களிலும், வாயிற்படிகளிலும் கதவுகளிலும் மஞ்சள் பூசும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றனர். அன்றியும் பெண்மணிகள் தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்யுங்கால் மஞ்சளரைத்துப் பூசிக்கொள்ளவேண்டும் என்பது புராதனக்கொள்கை. அவ்வாறு பூசிக்கொண்டு ஸ்நானம் செய்துவிட்டு சமையலறைக்குப் போய் சமைக்கத் தொடங்குவதால் நெருப்பினது வெப்பம் அவர்கள் மீது தாக்கிக் கெடுதி செய்யாதபடி ஓர்வித குளிர்ச்சியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. உஷ்ண வியாதிகளான கக்குவான், இருமல் முதலிய நோய்களுக்குங்கூட பசுவின் பாலில் மஞ்சட்பொடி கலந்துண்டால் தேகம் குளிர்ச்சியடைந்து அந் நோய்கள் குணமடைகின்றன. தவிர, நாள்முழுவதும் பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருந்து காலங்கழிக்க வேண்டியிருப்பதாலும், அவர்களுக்குச் சூரியவொளி தேகமுற்றும் தாக்க ஏதுவில்லா திருப்பதாலும், அவர்களது வியர்வையினின்று தோன்றும் நோய்க்கிருமிகளும் இருட்டறையிலுள்ள விஷக்கிருமிகளும் அவர்களைப்பற்றி நோய் உண்டாக்குமாதலால், அவர்கள் மஞ்சள் பூசிக்கொண்டால் அக்கிருமிகள் சரீரத்திற் பட்டவுடன் இறந்துவிடுகின்றன. இத்தகைய சிறந்தமுறையை நம் முன்னோர்கள் வகுத்திருக்க, தற்காலத்திய சகோதரிகள் சோப்பு தேய்த்துக் குளிக்கும் முறையையே கையாளுகின்றனர். மஞ்சளின் அரும்பெருங் குணங்களை யறியாமையினாலல்லவா இவர்கள் இவ்வாறுகின்றனர்?

சகோதரர்களே! சகோதரிகளே!! நம் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள நம் இந்துமதக் கொள்கைதோறும் ஒவ்வொன்றிலும் சுகாதார விதிகள் பல பொதிந்து கிடக்கின்றன. ஈண்டு ஒவ்வொன்றையும் விரித்துக் கூறப்புகின் மிகப் பெருகுமாதலால் இஃதுடன் முடித்துக் கொள்கின்றேன். இனி, நாம் நமது மதக்கொள்கைகளைச் சற்றும் நழுவவிடாமல் ஒவ்வொன்றிலுமுள்ள சுகாதாரங்களைத் துருவியாராய்ந்தறிந்து அதன்படி யொழுகி மேன்மையடையுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

---

## நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்களுக்கு
# ஓர் வேண்டுகோள்.

---

தொன்றுதொட்டு சிவதிருப்பணியே சிறப்பாகக்கொண்டு விளங்கும் நம் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், திருப்பாடல் பெற்ற அநேக க்ஷேத்திரங்களிலும் நமது செட்டிமார் நாட்டிலும், சென்ற எண்பத்தைந்து வருடங்களுக்குள், அளவில்லாத சிவாலய விஷ்ணுவாலய திருப்பணிகள் பலவும் செய்திருக்கிறார்கள் என்பது உலகமறிந்ததொன்றாம். அன்றியும், அவ்வாலயங்கட்கு அங்கங்களாகவும், பொதுஜனங்கட்குச் சௌகரியமாகவும், திருநந்தனவனம், பசுமடம், வேதபாடசாலை, ஆகமபாடசாலை, தேவார பாடசாலை, திருவாசகபாடசாலை, திருமுறைப் பாராயணசாலை, வித்தியா சாலை, வைத்தியசாலை (ஆஸ்பத்திரி), தண்ணீர்ப்பந்தர், தடாகங்கள், நிரந்தர அன்னசத்திரம், சாதுக்கள் மடம், வேதாந்தமடம், சித்தாந்தமடம், அறுபத்துமூவர் குருபூசைமடம், அன்னதானமடம், துவாதசி மடம் முதலான பற்பல அறநிலையங்களையும் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள். சிற்சில இடங்களிலுள்ள தர்ம ஸ்தாபனங்களில், இஃது இன்னாரால் இன்ன காலத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது என்று ஒருசிலரே என்னுடைய வற்புறுத்தலின்மேல் எழுதி வைத்திருக்கிறார்கள்.

நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், நம் செட்டிமார் நாட்டிலும், சோழநாடு, தொண்டைநாடு, நடுநாடு, பாண்டியநாடு, கொங்குநாடு, ஈழநாடு, மலாய்நாடு, பர்மாநாடு, சிலோன்நாடு, செய்கோன் நாடு முதலிய பலநாடுகளிலும் பலகோடிக்கணக்கான பொருள்களைச் செலவிட்டுச் செய்யப்பெற்றுள்ள பலவகையான தர்மங்களையும் தொகுத்து யாத்து ஓர் நூல் வடிவமாக வெளியிட வேண்டுமென்னும் அவா எனக்கு வெகுநாளாக இருந்துவருகிறது. என்பால் அன்புள்ள சிவநேசச் செல்வர்களிற் சிலர் இக்கருத்தை முற்றுவித்தல் நமது மரபினர்களின் தருமநிலையங்களின் தகைமையை யறிதற்குத் தக்கதொன்றாகும் எனக்கூறி என்னை மேன்மேலும் இவ்விஷயத்தில் ஊக்குவித்தார்கள். இதற்காகக் கும்பாபிஷேகப் பத்திரிகைகள், மற்றைய தர்மஸ்தாபன பத்திரிகைகள் முதலியவற்றை மிகப் பிரயாசையுடன் சேகரிக்கத் தொடங்கினேன். இதுபற்றி அநேகருக்கு ரிப்ளை கார்டுகள்எழுதியும், கடிதங்களெழுதி அவற்றுடன் தபால் முத்திரைவைத்தனுப்பியும் விசாரித்தேன். ஒரு சிலரே விடையளித்தனர். ரிப்ளை கார்டுகளில் மறுமொழி வரைந்தனுப்பாதவர்களும், கடிதங்கட்குப் பதிலெழுதாதவர்களும், இத்தகுநூல் எதற்காக என ரிப்ளை கார்டில் எழுதியவர்களும் பலரே.

மேனாட்டார்களாகிய அங்கிலேயர்கள் ஏறக்குறைய இரண்டாயிர வருஷங்களாக, தங்கள் தங்கள் குடும்பத்திலும், ஊரிலும், நாட்டிலும், தாங்கள் பிரயாணம் செய்யும் பிறநாடுகளிலும், தாங்கள் பார்த்தவிசேஷங்களையும், காட்சிகளையும், வருஷம் மாசம் தேதியுடன் குறித்தெழுதித் தொகுத்துவைத்திருக்கிறார்கள்.

நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள பல திருக்கோயில்களிலும் முப்பத்தையாயிரம் சிலாசாசனங்கள் வடமொழி தென்மொழி தெலுங்கு மொழிகளில் உரைநடை செய்யுள்நடையாகிய இரண்டிலும் இருப்பதாக இதுவரை கணக்கிட்டிருக்கிறார்கள்.

நம்முடைய முன்னோர்களும் தாங்கள் கட்டிய திருக்கோயில்களில் ஒருபாங்கர் தங்கள் உருவத்தைச் சிலையிற் சித்திரித் தமைத்தும், தங்கள் கோயில், வகுப்பு, விலாசம், பெயர்களைக் கல்லிற் செதுக்குவித்தும் இருக்கிறார்கள். தற்காலத்து நம்மனோரிற் சிலர் அப்படி அமைத்தல் கூடாதென்கின்றனர்.

தஞ்சாவூர் இராஜராஜேஸ்வரம் என்னும் தேவாலயத்தைக் கட்டுவித்த இராஜராஜ சோழனும், குலோத்துங்க சோழனும், பிற பல பாண்டிய மன்னர்களும் பலநூற்றுக்கணக்கான சிலாசாசனங்கள் செய்திருக்கிறார்கள்.

"..........................திருப்பணி செய்வார் தம்மை:
மானிட ரென்பார்க் கன்றோ வைத்தது நரக மெல்லாம்."

என்பதாதியாகப் பல புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கண்டும், என் நண்பர்கள் வற்புறுத்தலைக் கொண்டும், இவ் விவரங்களை ஒழுங்குபெற எழுதிமுடிக்க வேண்டுமென்று எண்ணி யிருக்கிறேன்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் எழுபத்தெட்டு ஊர்களில்இதுகாலை வசித்துவருகின்றார்கள். அவர்களே மேற்காட்டிய எல்லாவித தர்மங்களுக்கும் உரிமையுடையவர்கள்.

இதைக் கண்ணுறும் சிவபுண்ணிய செல்வர்கள் எல்லோரும், தங்கள் தங்கள் முன்னோர்களாலும் தங்களாலும், தங்கள் தங்கள் ஊரில் புதிதாய்ச் சிவலிங்கங்கள் கொண்டுவந்து செய்த திருப்பணி முதல் மேற்காட்டிய எல்லாத் தர்மங்களையும் தொடங்கியகாலம், முற்றுதல்செய்த காலம், கும்பாபிஷேகம் செய்தகாலம், தர்மஸ்தாபனம் செய்தகாலம் முதலியவைகளை, வருஷம் மாசம் தேதி விவரங்களுடன் மதுரைக்கு என்னுடைய விலாசத்துக்குக் கூடிய விரைவில் தயைசெய்து எழுதியனுப்பினால், இன்னும் இரண்டு மாதத்தில் மேற்குறித்த புத்தகம் அச்சிட்டு வெளியிட அநுகூலமாயிருக்குமென்று நிரம்பக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"திங்களஞ் சடையோன் சினகரஞ் செய்தோர்
திருவிழா இனிதினி னமைத்தோர்
அங்கவன் றடந்தேர் பண்ணுவித் தோர்கள்
சாறயர் மறுகமைத் திட்டோர்
கொங்கவிழ் தருவி னீழலிற் பன்னாட்
குலிசன்வாழ்த் தெடுப்பவீற் றிருந்து
மங்கையோர் பாக னுலகினை யடைந்து
மலரடி நீழல்வீற் றிருப்பார்." (கூர்மபுராணம்.)

வயி. நாக. ராம. அ. இராமநாதன் செட்டியார்,
(24—4—1934) மதுரை.

# ஜப்பான்தேசத்துப் பத்து அறவுரைகள்.

ஜப்பான்நாட்டுப் பெண்கள் புதிதாய்த் திருமண முடித்துக் கணவன் இல்லம் புகுங்கால், கீழ்க்குறித்த பத்து அறவுரைகள் அச்சிடப்பெற்ற ஒருதாள் அவர்களுக்கு வழங்கப்படும். சீதனப் பொருள்களுடன் சேர்த்து அனுப்புவது பண்டைநாள் தொட்டு வரும் வழக்கமாயிருந்து வருகின்றது. அந்த அறவுரைகளின்படி ஒழுகும் பெண்களே அங்கு உத்தமிகளென மதிக்கப் பெறுகின்றனர். மாறுபட்டு நடப்போர் இழிவாகக் கருதப்பெற்று அவமதிக்கப்படுகின்றனர்.

1. மணமுடித்தது முதல் நீ உனது தாய்தந்தையரின் மகளல்ல. புருடன் வீட்டினரை அன்புடன் நேசித்து நடந்துகொள்.

2. பெண்களுக்கு அணிகலன் கணவன் சொல் மீறாது ஒற்றுமையான வாழ்க்கை நடத்துவதே யாகும். கணவனே உனக்கு உண்மை ஆண்டவன். அவனிடம் வணக்கமும், மரியாதையும் செலுத்து.

["தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்." "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை." என்னும் திருவள்ளுவர் கருத்தை ஒட்டியுள்ளது இது.]

3. பெருமைபாராட்டித் திரியாதே. பெருமையானது உன்புருடனுக்குஉன்பேரிலுள்ள அன்பைக் குறைத்துவிடும்.

4. கடுஞ்சொற்களை அறவே ஒழித்துவிடு. பொறுமையைப் பூஷணமாகக் கொள். தக்கசமயம் வாய்க்கும்போது நயமாய்க்கூறி உனக்கு வேண்டியதைப் பெற உன் கணவனிடம் உத்தரவு பெற்றுக்கொள்.

5. பேச்சுக்காரி என்று பேரெடுக்காதே. அதிகம் பேசும் பெண் அரைக்காசுக்கும் உதவாள். பேச்சு அதிகரித்தால் பொய்யும், புரளியும் அதிகமாகும்.

6. சோதிடனிடம் குறி கேளாதே. எத்தொழில் செய்யினும் உன் கணவனறியச்செய்.

7. அடுத்த வீட்டுக் காரியங்களில் கவலை கொள்ளாதே. உன்குடும்பத்தை நன்கு கவனித்து நடந்துகொள். வரவுக்குத் தக்க செலவுசெய்.

['மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான், வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.' என்னும் திருக்குறளோடொற்றுமையுடையது இது.]

8. செல்வவான் மகளாயினும் அகங்காரம் கொள்ளுதல் கூடாது. உன் செல்வாக்கைக் குறித்துப் பிறரிடம் பேசாதே.

9. கடவுள், அரசன், தேசம் மூன்றிற்கும் நீ செய்யவேண்டிய கடமைகள் பல. தேசம் வேண்டும்போது மறுக்காமல் உன்கடமையை ஆற்று. உன் மக்களையும் தேசத் தொண்டிற்கு மகிழ்ச்சியுடன் அனுப்பு.

10. உண்மை வழியே நட. மிகுந்த தைரியம்கொள். தேசநலத்தைப் பெரிதாக மதித்து வாழ். அனைவரையும் உனது சகோதரர்களாகக் கருது. உயிர்களிடத்திற் கருணையா யிரு. தேச சேவையே பெரிதென்பதை உன் மக்களுக்கு அறிவுறுத்து. உன்மக்களுக்கு ஐந்து வயதுவரையில் நீயே ஆசிரியர் என்பதை கவனத்திற்கொள். தூய்மையும், சுகாதாரமும் உள்ள வாழ்க்கையே இல்வாழ்க்கை என்பதை உணர்ந்து உனது இல்லத்தை அழகுபடுத்தி மனோரம்மியமான சிறந்த வாழ்க்கையை நடத்து.

௯

# எடுத்துக் காட்டின் இயல்பு.

எவரும் தம் கருத்தை உறுதிப்படுத்தற்கு முன்னோர் கூறிய பொன்மொழிகளை எடுத்துக்காட்டுதல் இயல்பேயாம். எடுத்துக் காட்டு, மேற்கோள், ஆசிரியவசனம், பழஞ்சூத்திரம் என்பன ஒரு பொருளன.

ஒரு பொருளைப்பற்றி மாறுகொண்ட இருவர் வாதிக்குங்கால் ஒருவர் தம் ஆசிரியவசனங்களை யெடுத்துக் காட்டுதலினும், மற்றையர் மேற்கொண்ட நூற்களிலுள்ள பழஞ்சூத்திரங்களை யெடுத்தாளுதல் மிகவும் வலியுடைத்தாகும்.

உதாரணமாக: வேதாந்திகளை மறுப்போர் அவர்களுக்கு ஆதாரமான வேதாந்த சூடாமணி, கைவல்யம், பிரமகீதை, ஞானவாசிட்டம் முதலிய நூற்களிலும், சித்தாந்திகளை வாதிப்போர் அவர்கள் மேற்கொண்டுள்ள சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆதிய நூற்களிலும், இவ்வாறே வைணவர்க்குத் திருவாய்மொழியிலும், கிறித்தவர்க்குப் பைபிலிலும், மகமதியர்க்குக் கொரானிலும், பௌத்தர்க்கு மணிமேகலையிலும், சமணர்க்குச் சீவகசிந்தாமணியிலும் எடுத்துக்காட்டி அவரவர் கொள்கைகளை நியாயவாயிலாக மறுத்து, அவ்வாசிரிய வசனங்களைத் தம் கருத்துக்கிசையப் பொருத்தித் தமது கொள்கையைச் சாதித்தல் சால்புடைமையாம். தத்தம் ஆசிரியவசனங்களையும், இருவர்க்கும் ஒத்தநூற்களின் மேற்கோள்களையும் எடுத்தாளுதல் யாவர்க்கும் இயல்பேயாகும். பழஞ்சூத்திரங்களை எடுத்தாளும்போது, அவ்வாசிரியரின் மதம், நூலின் இயல்பு, பொது சிறப்பு உடன்பாடு எதிர்மறை புறனடையாதிய விதிகளின் றன்மைகள், எடுத்தாளற்கு வேண்டும் இடங்களின் இயைபு ஆதியவற்றைப் பல்லாற்றானும் பொருந்துமாறு தெரிந்துகோடல் சிறந்தமுறையாம்.

“அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்ற லினிது.”

என்பது திருக்குறள். ஒருவன் அதர்மங்கள் யாவும் செய்பவனாயினும் ஆகுக: புறங்கூறுதலாகிய தீயொழுக்கம் அவன்கணில்லையாயின், அவ்வின்மையே எல்லாத் தர்மங்களின் பயனையும் எளிதிற் பயப்பதாகும் என்பது இதன் கருத்தாம். இதனால், நாம் புறங்கூறாமையை மாத்திரங் கடைப்பிடித்து, மற்றைய கள், காமம், சூது, கொலை, பொய் ஆதிய எவ்வித தீவினைகளையும் செய்யலாம் என எண்ணிவிடலாமா? தீவினைகளெல்லாம் திரண்டாலும், தனக்கு ஒரு கூறாக உடையது புறங்கூறுதலாகிய கொடியவினையெனக்கொள்ளுதலே பொருத்தமாமன்றோ?

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே."

என்பது நன்னூலின் புறனடைச்சூத்திரம். நன்னூலார் தாம்கூறிய எழுத்து, சொல் ஆகிய இலக்கணங்களுள், தொல்லாசிரியர் காலத்தில் வழங்கி யிப்போது வழக்கத்தில் ஒழிந்தவற்றை, 'இறந்தது விலக்கல்' என்னும் உத்தியால் ஒழித்தும், செந்தமிழில் வடமொழி நனிமிகவி வழங்குதலைக் கருதிப் 'பதவியல்' என்னும் ஒரு இயலை எதிரது போற்றலால் இடையே புகுத்தியும் இருந்தாலும், காலவேற்றுமையாற் குற்றமாகக் கொள்ளலாகா என்பது இதன் உண்மைக் கருத்து.

நன்னூலார் தமது இலக்கண நூலுக்கு அரணாக அமைத்துக் கொண்ட இப்புறனடையைச் சிறப்பு விதியாகக் கொண்டு, பழமையானவையும் ஓராமற் கைவிட்டுப் பொருந்தாத புதுமை பலவும் பொருத்திக் கொள்ளலாம் என உலகநடையில் இவ்வெடுத்துக் காட்டை உபயோகித்து இடர்ப்படுகின்றனர் சிலர். ஈண்டு செய்யுள் வழக்கு உலகவழக்காகிய இருவகையுஞ் சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.

சாதி குலம் கோத்திர முதலியன சாத்திரங்களில் வகுத்திருத்தல் பண்டைய பழக்கம். இவ்விருபதாம் நூற்றாண்டிற் சாதியாவது, குலமாவது, சாத்திரமாவது, கோத்திரமாவது எல்லாம்புரட்டு. 'பழையன கழிதல் புதியன புகுதல்' என்றபடி, 'சாதிவேற்றுமையைத் தள்ளி, திருக்கோயில் திருமடம் முதலியவற்றைப் பள்ளிக்கூடம், மருத்துவசாலைகளாக மாற்றிக் கொள்ள வேண்டும்.' என்பதற்கும் இப்பழஞ்சூத்திரத்தை யெடுத்தாளலாமா? இவ்வாற்றால் எடுத்துக் காட்டுகளின் இயல்பும், அவற்றை யிடமறிந்து பொருத்திக் காட்டும் முறையும் கவனத்திற் செலுத்தவேண்டும் எனத் தெளிவாகிறது.

சென்ற நூற்றாண்டில் ஆங்கில அரசியற் குட்பட்ட ஆரம்பகாலத்தில் நம் பாரதநாட்டில், அரசமதமாகிய கிறித்தவ மதம் ஆங்கு முற்றுப் பரவத் தொடங்கவே, இங்கிலந்து, ஜெர்மனி முதலிய மேலைநாடுகளிலிருந்து கிறித்தவமத போதகக் குருமார்கள் ஆகிய பாதிரிமார்கள் வந்து நம்நாட்டிற் பலபாகங்களினும் வதிந்து, அவ்வவ்விடங்களிற் பயிலும் மொழிகளைக் கற்று, அவற்றின் வாயிலாகப் பிற மதங்களை மறுத்துத் தம் மதத்தை விருத்திசெய்யும் தொண்டை மேற்கோடலானார்கள்.

அவ்வகையில், நமது தமிழ்நாட்டில் வதிந்து, செந்தமிழ்ப் புலமையிற் சிறந்த பண்டிதர்களுக்கு வேண்டும் ஊதியம் கொடுத்து, அவர்களைப் போதகாசிரியராகக் கொண்டு கற்பன கற்றுத் தேறிப் பற்பல நூல்கள் இயற்றித் தமிழ்வளர்ச்சிக்குப் பரோபகாரிகளாக விளங்கிய பாதிரிமார்கள் பலராவர். அவர்களுள், ரெவரண்ட் போப்பையர் என்னும் பெரும் பெயரும், அவரது நுண்மாணுழைபுல

னும், அதனால் அவர்படைத்த புகழும் இவ்வுலகம் உள்ளவரை அழி யாது விளங்கும் பெருமையை யடைந்துள்ளன என்பது தமிழ்நாடு நன்கறிந்ததே. இவ்வாறு தமிழ்ச்சுவையிற் றேக்குண்டு, மதக்கோள் களின் உண்மையிலுறைத்து நின்றோர் ஒருபுடையிருக்க, தம் மத விருத்தியையே நாடி நமது மதநூல்களில் ஆய்ந்தவற்றுள் தமது கருத்துக்கிசைந்தவற்றை அங்கொன்று மிங்கொன்றுமாக எடுத்துக் காட்டி நமது கொள்கையை மறுத்துத் தமதுமதத்தை நிறுவுவதே தமக்குரிய தொண்டாகக் கொள்ளும் பாதிரிமார்கள் யாண்டுங் கா ணப்படுவர். இவர்கள் இத் தொண்டைப் பேச்சளவிலே நிறுத்தி விடாமல், சிறுதுண்டுப்பிரசுரமுதல் பெரியநூல்கள் வடிவமாகவும் வெளியிட்டு வருகிறார்கள். அவற்றை அவ்வப்போது நமது மத சித்தாந்த பேராசிரியர்கள் நியாயவாயிலாக மறுத்துரைத்து நமது மதக்கோளை உறுதிப்படுத்திய நூல்களும் பல வழங்குகின்றன.

அப் பாதிரிமார்கள் விக்கிரக வணக்கத்தைக் கண்டிக்குங்கால்,

"நட்ட கல்லைத் தெய்வ மென்று நாலு புட்பஞ் சாத்தியே
சுற்றி வந்து மொணமொ ணென்று சொல்லுமந்த்ர மேதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"

எனச் சிவவாக்கிய சித்தர்பெருமானும்,

"உளியிட்ட கல்லையும் ஒப்பிட்ட சாந்தையும் ஊத்தையறப்
புளியிட்ட செம்பையும் போற்றுகிலேன்..."

"கல்லிலும் செம்பிலு மோவிருப் பானெங்கள் கண்ணுதலே."

எனப் பரமஞானியாகிய உங்கள் பட்டினத்தடிகளும் அருளியவற் றை ஆழ்ந்து நோக்குங்கள் என உபதேசிப்பர்.

இவ்வாறே திருநீறு, திருவைந்தெழுத்து முதலிய சிவசாதன ங்கள், சிவபூசை, தீர்த்தம், தேர்த்திருவிழா முதலியவற்றை வா திக்கும்போது,

"நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன நீமனமே
ஏற்றிக் கிடக்கு மெழுகோடி மந்திர மென்னகண்டாய்."

"நேமங்கள் நிட்டைகள் வேதங்க ளாகம நீதிநெறி
ஓமங்கள் தர்ப்பணம் சந்தி செபமந்த்ர யோகநிலை
நாமங்கள் சந்தனம் வெண்ணீறு பூசி நலமுடனே
சாமங்க டோறும் இவர்செய்யும் பூசைகள் சர்ப்பனையே."

எனப் பட்டினத்தாரும்,

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஒங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீசன் எனாதவர்க் கில்லையே."

எனத் திருநாவுக்கரையரும்,

"தேரைத் திருநாளைச் சேவிப்போர் தம்மைவிட்டங்
காரைத் தொழப்போரார் ஐயகோ!—தேரிடையே
பார்க்கின்ற தெய்வம் பரிபூ ரணமலவோ?
ஆர்க்குந் தெரியாத தோ?

எனச்சொரூபானந்தரும், இன்னும் உங்கள் சமயப்பெரியார்பலரும் விக்கிரக வணக்கம் முதலியவற்றை வெறுத்துரைத்திருத்தலை உய்த்துணருங்கள் என எடுத்துக்காட்டுவர்.

இவைகள் எல்லாம் எடுத்துக்காட்டாமா? இம்மேற்கோள்கள் அவ்வவ் நூல்களில் எந்த இடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன? அவற்றின் ஆசிரியர்களின் கொள்கை யாது? அவர்கள் சரியை கிரியை யாதிய நால்வகை நிலைகளில் எநிலிருந்து இவற்றைச் சொல்லியுள்ளார்கள்? அந்நிலைகட்கும் உபதேசிக்கப் பெறும் மக்களின் பக்குவத்துக்கும், அண்டத்துக்கும் அணுவுக்கும் உள்ள வேற்றுமையினும் அதிகமாமே? அப்படியிலுள்ளார்க்கு இம்மேற்கோள்கள் எப்படி யிசையும்? எனக்கொஞ்சமேனும் ஆய்ந்தறிந்து எடுத்தாள வேண்டாமா?

"கான்சாயும் வெள்ளி மலைக்கர சேகின் கழனம்பினேன்
ஊன்சாயும் சென்ம மொழித்திடு வாய்கட ஆரனுக்கா
மான்சாயச் செங்கை மழுவலஞ் சாய வளைந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே."

"நல்லா யெனக்கு மனுவொன்று தந்தருள் ஞானமிலாப்
பொல்லா வினைக்கொன்று போடும் பொழுதியல் பூசைசெபம்
சொல்லாதற் கோயில் நியமம் பலவகைத் தோத்திரமும்
எல்லா முடிந்தபின் கொல்லுதண் டாய்கச்சி யேகம்பனே."

"........திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத் தோதவுங் கற்பியுமே."

என்பனவாதியாக அளவிறந்த மேற்கோள்கள் அவ்வவ் நூல்களில் விக்கிரகவணக்கமாதியவற்றை வலியுறுத்தக்காண்கிறோம். ஆதலால், மேற்கோள்கள் வேண்டும் இடம் முதலியவற்றிற்கு இயைந்தவாகவும், ஆசிரியர்கருத்துக்கு மாறுபடாவாகவும் ஆய்ந்தெடுத்து ஆளுதல் அமைவுடைத்தாம்.

ஆடு குழை தின்றாற் போலும் அங்கொன்று மிங்கொன்றுமாகப் பொருந்தாமேற்கோள்களை யெடுத்தாளும் பாதிரிமார்களோடொப்ப, நமது சமயத்திற் றோன்றிய சில மேதாவிகள் சாதி சமயாசாரம் கோயில்குளம் முதலியவற்றில் திருத்தங்கள் செய்யப்புகுந்து பேசுவதிலும், எழுதுவதிலும் நமது ஆசிரிய வசனங்களிற்சிலவற்றைத் தமதுகருத்துக் கிசைய எடுத்தாளுகிறார்கள். எங்ஙனமெனில்:

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே."

என்னும் திருமூலநாயனார் திருமந்திரச் செய்யுளை யெடுத்துக்காட்டி, குலமும் ஒன்றே, கோத்திர மொன்றே, தெய்வமும் ஒன்றே எனச் சாதிக்க முன்வருகிறார்கள். இம்மேற்கோளைப் பற்றுக்கோடாகக் கொண்டால், இந்நூலின் மற்றை 2999 செய்யுட்களின் இயல்புகளை யுற்றுநோக்க வேண்டாமா?

திருமந்திரம் சைவத்திருமுறைகளில் ஒன்று. ஆகமங்களைச் சாரமாய் வடித்தெடுத்த தண்ணமுதொப்பது. இது பரசிவப்பிரபாவம் திரிமூர்த்திகளின் ஜேஷ்ட கனிஷ்டமுறைமை, வேதாகமச் சிறப்பு, அக்கினிகாரியம், அந்தணரொழுக்கம், அரசரொழுக்கம் முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டு யாக்கப் பெற்றிருத்தலின், சாதிவேற்றுமை, தெய்வவேற்றுமை இல்லையெனச் சாதித்தற்கு இந்நூல் எட்டுணையும் இடந்தருவதாகுமா? இதுவோ பரிபாஷை நிரம்பிய நூல். கருவிநூற் றுணைகொண்டு இந்நூற்கருத்தின் உண்மை காண்டல் சாத்தியப்படாதெனவும், ஆசிரியர் பரம்பரையில் அவைவுடன் உபதேசமுறையிற் கேட்டுணரத்தக்க உயர்நல முடையதெனவும் பெரியோர் கூறுவர்.

"அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழ லோம்பிமுப் போது நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியு மோதிடச் சடங்கறுப் பார்களே."

"சிவமுதன் மூவரோ டைவர் சிறந்த
அவைமுத லாறிரண் டொன்றொடொன் றாகு
மவைமுதல் விந்துவு நாதமு மோங்கச்
சவைமுதற் சங்கரன் றன்பெயர் தானே."

என்பனவாதியாக இந்நூலிலுள்ள அளவிறந்த மேற்கோள்களால், இந்நூல் வேதாகமவழியிற் பிறழா விழுப்ப முடையதெனவும், சாதிசமயாசாரங்களைத் தழுவி நடக்கும் சால்புடையதெனவும் பசுமரத்தாணிபோற் சாதிக்கத் தக்கதாமே. வேதம் பொதுவும் ஆகமம் சிறப்பு மாதலின், ஆகமசாரமாகிய இந்நூல் சதாசாரங்களை மிக்கெடுத்து விளக்குவதாம். ஆகவே, சாதிசமய வேற்றுமை யில்லையெனச் சாதிக்க இந்நூலை எடுத்தாளக் கருதுதல் எவ்வளவு பொருத்தமாமென்பதை நேயர்களே கூர்ந்துநோக்குவார்களாக!

மேற்கூறிய பாதிரிமார்கள் முதலிய பிறமதத்தர்கள்தாம் நமது நூல்களிலுள்ள விதிவிலக்குகளின் இயல்புணராது மேற்கோள் எடுத்துக்காட்டியிடர்ப்படுகின்றனரென்றால், நமதுசமய நூலாராய்ச்சியிற் றலைசிறந்தவர்களா யுள்ளவர்களும் இதில் தடுமாற்றமடைகின்றனரே. அந்தோ! இஃது இக்காலத்தின் கோலம்போலும். இன்னும், இதுபற்றிய ஆராய்ச்சிகள் பல பின்னும் வரும்.

தெய்வசிகாமணி.

# மதிப்புரை மஞ்சரி.

## மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்.

நமது நற்றமிழ் நாட்டிலே, சென்ற நூற்றாண்டிலே, தமிழ்த்தாயின் தனித்தவப்புதல்வராய் அவதரித்து, சதுர கவிகட்கோர் சக்கரவர்த்தியாய், செந்தமிழ்ப் புலவர் சேனாதிபதியாய், நாவீறு படைத்த பாவீரராய், நாவலர் பாவலர் நாயக மணியாய், பல்லிசை நிறுத்த நல்லிசைப் 'புலவர்கண் மணியாய் விளங்கிய திருவாவடுதுறை யாதீனத்து மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களின் வாழ்க்கை வரலாற்றை விரித்துரைக்கும் விழுமிய உரைநடைநூல். இதனை எழுதி வெளியிட்டுள்ளவர், இம்மகாகவியின் முதன்மாணவர் குழாங்களுள் ஒருவரும், சென்னை இராஜதானிக் கல்லூரியிற் பல யாண்டுகள் தமிழ்த் தலைமைப் புலமைநடாத்தி மகாமகோபாத்தியாயர்—தாக்ஷிணாத்திய கலாநிதி—டாக்டர் என்னும் பெறற்கரும் பெரும்பெரும் பெயர்களைப்பெற்று விளங்குபவரும் ஆகிய மறைத்திருவாளர் உ. வே. சாமிநாதையரவர்கள். இவ் வரலாற்று முறையைத் திரு. ஐயரவர்கள் தாம் பிள்ளையவர்களை அடுத்துப் பாடங்கேட்டதற்கு முன்னர் நிகழ்ந்தவற்றை முதற்பாகமாகவும், பின்னையவற்றை இரண்டாம் பாகமாகவும் வகுத்துரைத்துள்ளார்கள். நிகழ்ச்சிகளைத் தொகுத்துப் பல பெரும் பிரிவுகளாக வகுத்து, அவ்வப் பிரிவுகளுக்குள் அமைபவைகளை முறையே விரித்து விளக்கி யிருக்கிறார்கள். முகவுரைகளில், புலவர் பெருமக்களின் பெருந்தகைமையும், வாழ்க்கைத்திறனும், பிறவும் பிண்டமாகக் கொண்டு காட்டி, இச்சரித்திரத்தைத் தாம் வரைந்த வரலாற்றைத் தந்துரைத்துள்ளார்கள். முதற்பாகத் தொடக்கத்தில், பிள்ளையவர்களின் முன்னோர்நிலை, தந்தையார் தகைமை, பிறப்பு, வளர்ப்பு ஆதியவற்றைத் தொகுத்துரைத்து, அவர் கல்விகற்ற முறையை விளக்குகையில், "பலவிடங்களினும் பலதிறப்பட்ட ஆசிரியர்களை அடைந்து, அவர்கட்கு 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது' உவப்புற வொழுகிக் கல்வி பயின்று, பல்வகை நூற்பொருள்களையும் பொன்வணிகர்போலப் பல்லாற்றானும் அவர் ஈட்டிய பண்புரைத் திருத்தல் பலரும் பாராட்டற்குரியதே. பிள்ளையவர்கள் காலத்தில் தமிழ்நாட்டின் பலபாங்கரினும் வதிந்த புலவர் பெருமக்கள், கவிஞர்க்குக் கற்பகமென விளங்கிய கனதனவான்கள், பிள்ளையவர்களை யாதரித்த பிரபுக்கள் முதலியோர்களின் பெயர், மரபு, புலமைத்திறன், வள்ளன்மை யாதிய குணாதிசயங்கள் பலவும் நன்கு விளக்கப்பெற்றிருக்கின்றன. பிள்ளையவர்கள் சென்றிருந்த தலங்களின் வரலாறு, இயற்கைவனப்பு, அவைகட்குப் பிரபந்தம் புராணம் ஆகிய நூல்கள் இயற்றுவிக்க வேண்டிக்கொண்ட பிரபுசிகாமணிகளின் பெருமை, அவ்வாறு இயற்றப்பெற்ற நூல்களின் அமைப்பு, அவற்றைப் பற்றிய சிறிய ஆராய்ச்சி, அவ்வவ் நூல்களிற் சொற்பொருட்சுவையும் கற்பனைத்திறனும் மலிந்திருக்கும் சிற்சில செய்யுட்களை எடுத்துக்காட்டி அவற்றுள்ள அருஞ்சொற்றொடர்கட்குப் பொருள் வரைந்து, உவமை உருவகம் முரண் மடக்கு முதலிய அணிவகை யாப்பியல்களின் நயமுறைத்திருத்தல், முன்னோர் மொழியைப் பொன்னேபோற் போற்றுமுறையால் தேவார திருவாசகம் ஆதிய அருணூல்களின் கருத்துக்களும் சொற்றொடர்களும் ஒற்றித்துவந்தமை, வேற்றுருவிலமைந்தமையை விளக்கியிருத்தல், சைவசித்தாந்தசாத்திரக்கருத்துகள் பொதுளியபகுதிகளை விரித்திருத்தல் ஆகியவை

படிப்பார்க்கு அவ்வவ் நூல்களின் சாரம் மனத்திற் பதிதற்கு மிகுந்த சாதகமாம். இரண்டாம் பாகத்தில், பிள்ளையவர்கள் திரு. ஐயரவர்களை மாணவராக ஏற்றுக்கொண்டதும், ஐயரவர்கள் பாடங்கேட்ட பாங்கும், பிறவும் விரித்து விளக்கப்பெற்றுள்ளன. ஐயரவர்கள் ஆசிரியரைத் தெய்வத்தைப்போற் பாவித்தல், உடற்குயிர்போல் கட்கிமைபோல் ஊசிநூல் ஒத்து, அழனி னீங்கான் அணுகா னஞ்சி, நிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ, டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம் படர்தல், குணத்தொடு பழகல், குறிப்பறிந்தொழுகல், இருவென இருத்தல், சொல்லெனச் சொல்லல், பருகுவனன்ன வார்வத்தனதல், பாடம்போற்றல், கேட்டவைநினைத்தல், ஆசாற் சார்ந்தவை அமைவரக்கேட்டல், அம்மாண்புடையோர் தம்மொடு பயிறல், வினாதல் வினவியவை விடுத்தல் என்னும் இலக்கணங்கள் அமைதற்குத் தாமே சிறந்த இலக்கியமா யிருந்துள்ளார்கள் என்பது புலனாகின்றது. தளிரால்தளிர்த்த அன்பு, பட்டீசுவரநிகழ்ச்சிகள், திருவாவடுதுறை நிகழ்ச்சிகள் முதலியவற்றால், குறிப்பறிதல் பொறுமை ஆதிய நற்குணங்களையே பொற்கலங்களாக ஐயரவர்கள் பூண்டுளார்கள் என்பது மிகையாது. முதற்பாகத்தால், 'வலம்புரிமுத்திற் குலம்புரி பிறப்பும், வான்யாறன்ன தூய்மையும் வான்யாறு, நிலம்படர்ந் தன்ன நலம்பட வொழுக்கமும், திங்க ளன்ன கல்வியும் திங்களொடு, ஞாயி றன்ன வாய்மையும் யாவது, மஃகா வன்பும் வெஃகா வுள்ளமும், துலைநா வன்ன சமநிலை யுளப்பட, எண்வகை"ச்சிறப்பியல்களும்நிறைந்த நல்லாசிரியத்தன்மை பிள்ளையவர்களிட மமைந்திருத்தலும், இரண்டாம்பாகத்தால், அன்னத்தையும் ஆவையும் ஒத்த முதல்மாணவர்க்குரிய மேற்காட்டிய சிறப்பியல்களனைத்தும் ஐயரவர்களிடம்பொருந்தியிருத்தலும் உய்த்துணரத் தக்கனவாம். இதனால், மாணவர்க்கு ஆசிரியர் அமைந்தால் பிள்ளையவர்களைப்போல் அமைதலும், ஆசிரியர்க்கு மாணவரடுத்தால் ஐயரவர்களைப்போல் அடுத்தலும் அரிதினும் அரிதாம் என்பது அறியக்கிடக்கின்றது. ஆசிரியருடன் சாயையென அகலாதிருந்து, அவரது கல்வி, கேள்வி, அறிவு, குணம், செயல் யாவும் காட்சியிற் கண்டுணர்ந்த மாணவர் ஒருவரால் அவ்வாசிரியரின் சரித்திரம் எழுதப்பெறுதல் மிகவும் அமைவுடைத்தாகும். சென்ற ஒரு நூற்றாண்டு நிகழ்ச்சிகளை வரன்முறைப் படுத்திக் கோவை செய்தற்குரிய ஞாபகசக்தியும், குருபக்தியும் ஐயரவர்கள் பால் இக்கிருத்தல் கண்ட அறிஞர் பலரும் அகமகிழ்வடைவார். ஆசிரியருக்கு ஆற்றவேண்டிய பெருங்கடமையை ஐயரவர்கள் இச் சரித்திரத்தால் இனிது நிறைவேற்றியவராகின்றார்கள். இச்சரித்திரத்தில், 'சிவதருமோத்திரச் சுவடி பெற்றவரலாறு, சுப்பையா பண்டாரம் மாம்பழம் வாங்கிவந்தது" முதலிய பகுதிகள் படிப்பார் மனத்தைவசிக்கும் பண்புடையவாகக் காணப்பெறும். பல நூற்றுக்கணக்கான பெரியோர்கள், தமிழ்ப்புலவர், வடமொழிவாணர், சங்கீதவித்துவான்கள், வள்ளல்கள், பிரபுக்கள், நூல்கள், தனிச்செய்யுள்கள், உரைகள், ஸ்தலங்கள், மூர்த்திகள் ஆதிய வரலாறுகள் புலவும் தெரிந்து கோடற்குச் சிறந்த சாதனமாக இச் சரித்திரத்தை யெழுதி வெளியிட்டுள்ள திரு. ஐயரவர்கட்குத் தமிழுலகஞ்செய்யுங்கைம்மாறு யாதுளது? தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் இச்சரித்திரப் புத்தகங்களுள்ஒவ்வோர் பிரதி வாங்கிவாசித் தின்புறுதலே, திரு. ஐயரவர்கட்குச் செய்தற்கு உரிய பேருதவியாகும். ஐயரவர்களின் பதிப்பின் பாங்கு பலராலும் பலமுறை களாலும் பாராட்டப்பெற்றதே. இச் சரித்திரத்தை வெளியிட்டவாறே,

"சங்ககால முதல் தமிழ்மொழியை வளம்படுத்திய புலவர் பெருமக்களின் வரலாறுகளை முறையாக வெளியிடவேண்டும்." என்னும் எண்ணம் நெடுங்காலமாகக் கொண்டுள்ள திரு. ஐயரவர்கட்கு, அதனையும் முற்றுவித்தற்கு உடலுரனையும் நீடிய வாணாளையும் உதவியருள இறைவன் திருவருளை இடையறாது வழுத்துகின்றேம். இதன்விலை: ஒவ்வொருபாகமும் ரூபா 2.

## வேத சந்திரிகை.

இது, வேதோபநிஷத ஆசிரியரான திரு. எம். ஆர். ஜம்புநாதன் அவர்களால் எழுதப்பெற்று, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடாலயக் கருத்தராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் அவர்கள் பொருளுதவிகொண்டு பிரசுரிக்கப்பெற்றது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் சதுர்வேதங்களின் தாற்பரியங்களாகிய தண்ணிய கிரணங்களை வீசி, மாந்தர்களின் மனத்திருளகற்றும் மாட்சியினால் இதற்கு இப் பெயரெய்தியது. நம் தமிழ்மக்கள் யாவரும் சதுர்வேதசாரங்களை உணரத் தக்க எளிய உரைநடையில் இஃது இயற்றப்பெற் றிருக்கிறது. "உலகத்தின் புராதனநூல் வேதந்தான். அதுவே மானிட கோடிகளின் பழையநூல்." என்று வானமளாவப் புகழ்ந்து, ஜெர்மன் சித்தாந்தி சலேகர், மோட்ச மூலர், முதலிய நூற்றுக்கணக்கான இங்கிலீஷ், பிரஞ்சு, ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய மேலைநாட்டுமேதாவிகள், நமது வேதங்களை எழுத்தெழுத்தாய் ஆராய்ந்து, உரை முதலியன வெழுதிப் பலபல பாகங்களாக அச்சிட்டு வழங்கியுள்ளார்கள். கிராஸ்மன் என்னும்பெரியார் வேதத்தின் ஒவ்வொரு மொழியைப் பற்றியும் ஜெர்மனியில் ஒரு அற்புதநூல் இயற்றியிருக்கிறார். மேலைநாட்டு மொழிகளில் வெளியாகி, இந்தியாவில் இன்னும் அச்சேறாத வேதப்பகுதிகள் அநேகமாகக் காணப்படுகின்றன. அந்நியர்கள் மிகவும் அருமை பாராட்டி நமது வேதங்கள் இறந்துபடாமற் பாதுகாக்க, நம்வேதியர்கட்கு அவைகள் உண்டென்னும் நினைவு மில்லாம லிருப்பது மிகவும் அவமானத்திற் கிடமாகுமன்றோ? வேதம் என்பது இன்னது என்றே தெரியாத மக்களுக்கு அவற்றின் சாரமாகிய தண்ணிய இச் சந்திரிகை வெளிவர உளங்கொண்டு உதவிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத சுவாமிகளின் சமயப்பற்றும், தமிழபிமானமும் பாராட்டற்குரியவேயாம். இப்புண்ணிய சீலரது வித்தியாதருமவிசேடம், ஆண்டுதோறும் ஆயிரரூபா தமிழுக்குப்பரிசு வழங்குந் தண்ணளியால் நம்நாடு நன்கறிந்ததொன்றும். இவ்வாறே சுவாமிகள், வடமொழி ஆங்கில மொழிகளிலுள்ள சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்குதல், இக் காலத்தில் தமிழ்த்தாய்க்குச் செய்யவேண்டிய தொண்டுகள் பலவற்றினும் சாலச் சிறந்ததென்பாம். இதன்விலை அணா 8.

குறிப்பு:—காலேஜ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்களுக்கு இந்நூற்பிரதி தேவையிருந்தால், அவரவர்கள் வேலை பார்த்துவரும் காலேஜ் அல்லது ஹைஸ்கூல்களின் பிரின்ஸ்பால் அல்லது ஹெட்மாஸ்டர் இவர்கள் மூலம் தபாற் செலவுக்காக 0—5—3 லேபிள், "இராயசம், காசிமடம், திருப்பனந்தாள்" என்றவிலாசத்திற்கு அனுப்பினால், ஒரு புத்தகம் இனமாக ரிஜிஸ்டரில் அனுப்பப்பெறும்.

[ இவ் விருபெரு நூல்களின் பிரதிகளை எமது பார்வைக்கு அன்புடன் அனுப்புவித்த பிரமஸ்ரீ ஐயரவர்கட்கும், ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளவர்கட்கும் எமது மனமார்ந்த வந்தனம் வழங்குகின்றோம். பதிப்பாசிரியர். ]